# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

# 1987 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி முகாமைச் சபைச் சட்டம்

*[1987, திசெம்பர் மாதம் 24 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

*1987, திசெம்பர் மாதம் 24 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 90 — தபாற் செலவு : சதம் 75

**1987 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி முகாமைச் சபைச் சட்டம்**

[1987 திசெம்பர் 24 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ—11/86
1862

**மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதிக் கட்டிடங்களை முகாமை செய்வதற்கு முகாமைச் சபையொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அதன் குறிக்கோள்களையும் தத்துவங்களையும் குறித்துரைப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1987 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி முகாமைச் சபைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. (1) மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதியையும் அதன்கண்ணுள்ள கட்டிடங்களையும் கட்டுப்படுத்துவதற்கும், நிருவகிப்பதற்கும் முகாமை செய்வதற்கும் "மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி முகாமைச் சபை" என அழைக்கப்படவேண்டிய சபையொன்று இருத்தல் வேண்டும். இது இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்). மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி முகாமைச் சபையைத் தாபித்தல்.

(2) (அ) சபையானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர்மூலம் இடையறு வழியுரிமையும் ஒரு பொது இலச்சினையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும்.

(ஆ) சபையினாலான அல்லது சபைக்கு எதிரான எல்லா வழக்குகளும், 7 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்படும். மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி முகாமைச்சபை மார்ஷலினால் அல்லது மார்ஷலுக்கு எதிராகத் தொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) சபையானது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதியின் எல்லைகளை வரையறுத்தல் வேண்டும். அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட எல்லைகளினுள் வரும் காணியும் கட்டிடங்களும் சபையின் கட்டுப்பாட்டின் கீழிருத்தல் வேண்டும்.

3. (1) சபையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :— மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி முகாமைச் சபை.

(அ) பிரதம நீதியரசர் ;

(ஆ) பிரதம நீதியரசரால் நியமிக்கப்படும் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் ;

(இ) மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் ;

(ஈ) மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரினால் நியமிக்கப்படும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியொருவர் ;

2—ஏ 099923—2,820 (12/87)

(உ) நீதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(ஊ) உள்ளூராட்சி, வீடமைப்பு, நிருமாணம் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(எ) இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ;

(ஏ) கொழும்பு மாநகர சபைக்கான மாநகர ஆணையாளர் ;

(ஐ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சின் பிரதிநிதியொருவர் ; அத்துடன்

(ஒ) சட்டத்தில் எற்றங்கீகரிக்கப்படும் தகுதியை அல்லது தனித்திறமையைக் காட்டும் ஆட்களிடையேயிருந்து சனாதிபதியினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் இருவர். இப்பந்தியின்கீழ் நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர் இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்" ஒருவர் எனக் குறிப்பீடு செய்யப்படுவார்.

(2) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் முன்னரே பதவி விலகினாலன்றி அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(3) சனாதிபதி எந்நேரத்திலும், காரணம் எதையும் காட்டாது, நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதமொன்றின் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம்.

(5) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், இறப்பினால், பதவி விலகலால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதால் தமது பதவியை வறிதாக்குகின்றவிடத்து, சனாதிபதியானவர், (1) ஆம் உட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, பதவியை வறிதாக்குகின்ற உறுப்பினரின் இடத்தில் வேறோர் உறுப்பினரை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்படும் ஒவ்வோர் உறுப்பினரும், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ, அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சிய காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(6) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக, அல்லது வேறு ஏதேனும் ஏது காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராயிருப்பின், சனாதிபதி அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(7) சபையின் எல்லா உறுப்பினர்களுக்கும் அல்லது சபை உறுப்பினர்களுள் எவருக்கும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம், 8 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

(8) காலம் கழிவதன் மூலம் பதவியை வறிதாக்கும் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

4. (1) பிரதம நீதியரசர் சபையின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்திற்குப் பிரதம நீதியரசர் சமூகமாயிராத போது, அத்தகைய கூட்டத்தில் சமூகமாயிருக்கின்றவரான சிரேட்ட நீதிபதி அதற்குத் தலைமைதாங்குதல் வேண்டும். அத்துடன் சபையின் ஏதேனும் கூட்டத்திற்கு நீதிபதியொருவர் சமூகமாயிராத போது அத்தகைய கூட்டத்தில் சமூகமளித்துள்ள உறுப்பினர்கள் தம்மிடையேயிருந்து அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்கவென தவிசாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். — சபையின் கூட்டங்கள்.

(2) சபையின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண், கூட்டத் தேதியன்று பதவிவகிக்கும் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றிலொரு பங்கினராக இருத்தல் வேண்டும். அத்தகைய எண்ணிக்கையின் மூன்றிலொரு பங்கு ஒரு முழு எண்ணாகவும், பின்னமாகவுமிருக்குமிடத்து, அத்தகைய முழு எண்ணையும் பின்னத்தையும் உடனடுத்துக் கூடியதாகவிருக்கும் முழு எண் இந்த உட்பிரிவின் நோக்கத்துக்காக மூன்றில் ஒன்றுகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, சபையானது அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கைமுறையையும், அத்தகைய கூட்டங்களில் அலுவல்கள் கொண்டு நடாத்தப்படுவதனையும் ஒழுங்குபடுத்தலாம்.

(4) சபையின் செயலெதுவும், அல்லது நடவடிக்கையெதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருக்கின்றதென்ற காரணத்தினால் மட்டும் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு அல்லது ஒழுங்கீனம் இருக்கின்ற காரணத்தினால் மட்டும் செல்லுபடியாக்கப்படுதலாகாது.

5. சபையின் இலச்சினை— — சபையின் இலச்சினை.

(அ) சபை காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம் ; அத்துடன்

(இ) சபையின் அனுமதியுடனும், சபையின் இரு உறுப்பினர்களின் சமூகத்திலும் தவிர, ஏதேனும் ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது ; அவ்விருவரும் தாம் சமூகமாக இருந்ததற்கடையாளமாக அவ்வாவணத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.

6. சபையின் குறிக்கோள் மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியையும் அதன்கண்ணுள்ள கட்டிடங்களையும் கட்டுப்படுத்துதல், நிருவகித்தல், முகாமை செய்தல், அத்துடன் பேணுதல் அத்துடன் கட்டிடத் — சபையின் குறிக்கோள்.

தொகுதியினதும் அதன்கண்ணுள்ள கட்டிடங்களினதும் வாழ் வசதிகளை மேம்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய சேர்ப்புக்களையும் மாற்றங்களையும் சீர்திருத்தங்களையும் செய்தல் என்பனவாதல் வேண்டும்.

சபையின் தத்துவங்கள்.

7. (1) சபையானது அதன் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உகந்தனவான அல்லது இடைநேர்விளைவான எல்லாக் காரியங்களையும் செய்வதற்குத் தத்துவம் கொண்டதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, சபை பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் :—

(அ) உள்ளூர், அல்லது வெளியூர் மூலங்களிலிருந்து மானியக் கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளை, காசாக அல்லது பொருளாகப் பெறுதல் ;

(ஆ) மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதியிலுள்ள ஏதேனும் கட்டிடத்தை அல்லது காணியை வாடகைக்கு விடுதல் அல்லது குத்தகைக்கு விடுதல் ;

(இ) அதன் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு அல்லது அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது சபையினால் அதன் சார்பில் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள், சேவையாளர்கள் அல்லது முகவர்கள் என்போர் ஊடாகவோ செய்து கொள்ளுதலும் அத்துடன் புரிதலும் ;

(ஈ) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைவாக, "மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி முகாமைச் சபையின் மார்ஷல்" ஒருவரையும் (அவர் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலராக விருத்தல் வேண்டும்) அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும் அல்லது அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும், அத்தகைய மார்ஷல், அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள்மீது (அவர்களைப் பதவியிலிருந்து விலக்கும் தத்துவம் உட்பட) ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் ;

(உ) பந்தி (ஈ) என்பதன்கீழ் நியமிக்கப்பட்ட மார்ஷல், அலுவலர்கள், சேவையாளர்கள் என்போரின் ஊதியத்தையும் சேவை நியதிகளையும் நிர்மாணித்தல் ;

(ஊ) ஏதேனும் வங்கியில், அல்லது எவையேனும் வங்கிகளில் நடப்பு சேமிப்பு அல்லது வைப்புக் கணக்குகளைத் திறத்தலும், பேணுதலும் ;

(எ) சபையின் தத்துவங்கள் மற்றும் பணிகள் தொடர்பான ஏதேனும் கருமம் பற்றி விசாரணை செய்து அறிக்கை செய்யும் நோக்கத்துக்காக அது பொருத்தமெனக் கருதுகின்றவாறான அத்தகைய எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக்கொண்ட குழுக்களை அதன் உறுப்பினர்களிடையேயிருந்து நியமித்தல்.

8. (1) (இதன்கத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப் படும்) மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி நிதியம் என அழைக்கப்பட வேண்டிய நிதியம் ஒன்று இருத்தல் வேண்டும். — மீயுயர் நீதி மன்றக் கட்டிடத்தொகுதி நிதியம்.

(2) நிதியத்தின் கட்டுப்பாடும் முகாமையும் சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(3) நிதியத்திற்கு பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) உள்ளூர் அல்லது வெளியூர் மூலங்களிலிருந்து சபையினால் பெறப் படும் எல்லா நன்கொடைகளும் கொடைகளும் ;

(ஆ) சபையினால் வாடகைக்கு விடப்பட்ட அல்லது குத்தகைக்கு விடப்பட்ட எவையேனும் கட்டிடங்களுக்கான அல்லது ஏதேனும் காணிக்கான வாடகையாக சபையால் பெறப்படும் எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) ஒன்பதாம் பிரிவின்கீழ் அரசாங்கத்திடமிருந்து பெறப்படும் ஏதேனும் மானியம்.

(4) நிதியத்திலிருந்து பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதியினதும் அதன் கண்ணுள்ள கட்டிடங்களினதும் கட்டுப்பாட்டிலும், நிருவாகத்திலும், முகாமையிலும் அதற்குச் சேர்ப்புக்களை, மாற்றங்களை அத்துடன் சீர்திருத்தங்களைச் செய்வதிலும் சபையினால் உறப்பட்ட செலவுகள் ;

(ஆ) சபையின் அலுவலர்களுக்கும், சேவையாளர்களுக்கும் சம்பளங்களும், பணிக்கொடைகளும், வேறு வேதனாதிகளும் கொடுப்பதில் சபையினால் உறப்பட்ட செலவுகள் ;

(இ) அதன் தத்துவங்களையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும் சபையால் உறப்பட்ட செலினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவையான எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால் நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் பணத்தொகை.

9. சபையின் குறிக்கோளை நிறைவேற்றும் நோக்கத்திற்குப் போதியதான (சுங்கத்தீர்வைக்கான மானியம் ஒன்று உட்பட) மானியமொன்றைச் சபைக்கு அரசாங்கம் ஆண்டுதோறும் வழங்கலாம். — அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு மானியம்.

10. சபைக்கு அளிக்கப்படும் பணமான அல்லது வேறு வகையிலான ஒவ்வொரு நன்கொடையும், 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் உட்பந்தியின் நோக்கங்களுக்காக, அரசாங்கத்தால் தாபிக்கப்பட்ட ஒரு நிதியத்திற்குப் பணமாக அல்லது வேறுவகையாக அளிக்கப்பட்ட ஒரு நன்கொடையாகக் கருதப்படுதல் வேண்டும். — குறித்த சில வரிகளிலிருந்து விலக்களிப்பு.

கணக்குகளின் கணக்காய்வு.

11. (1) சபையானது, நிதியத்தின் வரவுகள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் அத்துடன் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பனபற்றிய முறையான கணக்குகள் வைத்திருத்தல் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரை, நிதியத்தினது கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

பாரஞ்சலின் கடமைகள்.

12. சபையானது 7 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்டவரான மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி முகாமைச் சபையின் மார்ஷலுக்கு, இச்சட்டத்தினால் சபைக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைக் கையளிக்கலாம் :

ஆயின், சபையானது எந்நேரத்திலும் அத்தகைய கையளிப்பைப் பொருட்படுத்தாது, அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

சபைக்கு பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.

13. (1) சபையின் வேண்டுகோளின்பேரில் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அந்த அலுவலரினதும் அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குச் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) சபையின் வேண்டுகோளின்பேரில் அரசியலமைப்பின் 114 ஆம் உறுப்புரையின் கருத்துக்குட்பட்ட, அட்டவணைப்படுத்தப்பட்ட எவரேனும் பகிரங்க அலுவலர், அவ்வலுவலரதும் நீதிச்சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குச் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய சபைக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவு, ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் சபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(5) ஒரு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்குச் சேவைசெய்வதற்கென அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்ட எவரேனும் ஆளைச் சபை தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் சபைக்குச் செய்யப்படும் ஏதேனும் சேவைக்காலப்பகுதி அவ்வொப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்குச் செய்யப்பட்ட சேவையாகக் கருதப்படுதல்வேண்டும்.

14. (1) சபையின் எவரேனும் உறுப்பினருக்கெதிராக அல்லது சபையின் எவரேனும் அலுவலருக்கு, அல்லது சேவையாளருக்கெதிராக, இச் சட்டத்தின்கீழ் அல்லது சபையினது பணிப்பின்மீது அத்தகைய உறுப்பினரால், அலுவலரால் அல்லது சேவையாளரால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் செயல் எதற்காகவும் தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது. இச்சட்டத்தின் கீழ் எடுக்கப் பட்ட நடவடிக் கைக்காக சபை யின் உறுப்பினர் களுக்கும் சபை யின் அலுவலர் கள் முதலியவர் களுக்கும் ஆவ பாதுகாப்பு.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்பாக சபையால் அல்லது சபைக்கு எதிராகக் கொண்டுவரப்படும் தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதிலும், சபையால் உறப்பட்ட எவையேனும் செலவுகள் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் சபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது சபையினால் அறவிடப்பட்ட எவையேனும் செலவு தொகைகள் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்பாக (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடுசெய்யப்படுகின்றவரான அத்தகைய எவரேனும் ஆளுக்கெதிராக, இச் சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது அவரால் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் கொண்டுவரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில், அத்தகைய ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டாலன்றி நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

15. தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும், அதன் நோக்கங்களுக்காகவும் சபையின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும். சபையின் அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக் கோவையின்கீழ் பகிரங்கசேவையாளர்களாகக் கருதப்படுதல்.

16. இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட, சபையானது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும். இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட சபையானது அட்டவணைப் படுத்தப்பட்ட ஒரு நிறுவனமெனக் கருதப்படுதல் வேண்டும் என்பது.

உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் சிறப்புரிமைகளைப் பேணிப் பாதுகாத்தல்.

17. இச்சட்டத்திலுள்ள எதுவும் உயர் நீதிமன்றத்தினதும் அதன் நீதிபதிகளினதும் அத்துடன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் அதன் நீதிபதிகளினதும் தத்துவங்களையும் சிறப்புரிமைகளையும் பாதித்தலாகாது அல்லது பங்கப்படுத்துதலாகாது அல்லது பாதிப்பதாக அல்லது பங்கப்படுத்துவதாகக் கருதப்படுதலாகாது.

1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

18. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, அரச காணிகள் (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டத்தின் 18 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) "தகுதிவாய்ந்த அதிகாரி" என்பதன் வரைவிலக்கணத்தில், (எ) என்றும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும் :—

"(ஏ) அத்தகைய காணியானது, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி முகாமைச் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள போது அல்லது அதன் கட்டுப்பாட்டின்கீழிருக்கும் போது, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி முகாமைச் சபையின் மார்வுஜேயும் ;"; அத்துடன்

(ஆ) "அரச காணிகள்" என்பதன் வரைவிலக்கணத்தில், "விடயத்துக்கேற்றுப்போல 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டத்தினால்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "விடயத்துக்கேற்றுப்போல 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகார சபைச் சட்டத்தினால் அல்லது 1987 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி முகாமைச் சபைச் சட்டத்தினால்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்".

பொருள்கோடல்.

19. இச்சட்டத்தில் சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி "மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி" என்பது 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் மூலம் வரையறுக்கப்பட்ட எல்லைகளினுள் அடங்கும் காணிப் பிரதேசம் எனப் பொருள்படும்.